<u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **232** இல் காணப்படும் கூட்டக் குறிப்பறிக்கையை அறிதல். அதோடு, பக்கம் **234** இல் காணப்படும் இடுபணி **2** பயிற்சியைச் செய்தல். உங்கள் விடைகளைத் தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

# பாடம் 3 மனித மூலதனமே பொருளாதார மேம்பாடு

## கூட்டக் குறிப்பறிக்கை எழுதுக.

### மரகதம் பட்டுமாளிகையின் மூன்றாவது செயற்குழுக் கூட்டக் குறிப்பறிக்கை

நாள் : 23 மே 20☐☐
நேரம் : இரவு மணி 7.30க்கு
இடம் : மரகதம் பட்டுமாளிகையின் கூட்ட அறை, கோலாலம்பூர்.
தலைவர் : திரு. முரளிதரன்

வருகையாளர்கள்:
1. திரு. ச. முரளிதரன் (நிறுவனத் தலைவர்)
2. திரு. ப. சத்தியமூர்த்தி (நிறுவனத் துணைத்தலைவர்)
3. குமாரி பா. தாமரைச் செல்வி (நிர்வாகச் செயலாளர்)
4. திருமதி செ. பார்வதி (குழு உறுப்பினர்)
5. திருமதி தா. மனோன்மணி (குழு உறுப்பினர்)
6. திரு. க. சண்முகசுந்தரம் (குழு உறுப்பினர்)

உடன் கலந்துகொண்டோர்: இல்லை.

> **தகவல் துளி**
>
> **SWOT** என்பது புதிய வகை தலைமைத்துவ வழிகாட்டியாகும். ஒரு துறையில் உள்ள குறை நிறைகளை அறிந்து மேம்பாடு காண்பதற்கு இது வழிவகுக்கும். அவை முறையே,
>
> **S**trength - பலம்
> **W**eakness - பலவீனம்
> **O**pportunity - வாய்ப்பு
> **T**hreat - அச்சுறுத்தல்

1. <u>தலைவர் உரை</u>
தலைவர் அனைவருக்கும் வணக்கம் கூறி, மரகதம் பட்டு மாளிகையின் தற்போதைய வளர்ச்சியையும் நடப்பு விவகாரங்களைப் பற்றி எடுத்துரைத்தார். மரகதம் பட்டுமாளிகை துணிக்கடையின் வியாபாரத்தை மேலும் விரிவாக்கம் செய்யத் தாம் எண்ணம் கொண்டுள்ளதாகக் கரவொலிக்கிடையே கூறினார்.

2. <u>கடந்த கூட்டக் குறிப்பறிக்கையை ஏற்றல்</u>
10 மார்ச் 20☐☐இல் நடைபெற்ற இரண்டாவது செயற்குழுக் கூட்டத்தின் அறிக்கையைக் குமாரி பா. தாமரைச செல்வி வாசித்தார். திருமதி செ. பார்வதி சரியென முன்மொழிய திரு. க. சண்முகசுந்தரம் அவர்கள் வழிமொழிந்தார். அந்த கூட்டக் குறிப்பறிக்கை எந்த மாற்றமும் இன்றி முழுமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. <u>பட்டு மாளிகையின் வளர்ச்சி</u>
மரகதம் பட்டு மாளிகை வளர்ச்சியையும் நிதி வகையில் நல்ல மேம்பாடும் கண்டுள்ளது என்று தலைவர் அவர்கள் தெரிவித்தார். இந்நிறுவனத்தின்மீது பயனீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது. மேலும், நம் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் நமது பல்வகையான துணிமணிகளின் தரத்தையும் பாராட்டியுள்ளனர். அதோடு நமது நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் மக்களின் நம்பிக்கை,

3.4.2i — 220 சொற்களில் கூட்டக் குறிப்பறிக்கை எழுதுக.

தேவைகளுக்கு ஏற்ப சிறப்பான பணியை வழங்கி வருகின்றன. இதனால், புதிய வாடிக்கையாளர்களும் நமது இந்த 4 மாடிக் கட்டடத்திற்கு வருகை தந்த வண்ணமாய் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்த நிறுவனத்தையும் வணிகத்தையும் விரிவாக்கம் செய்யலாம் என நினைக்கின்றேன் எனத் தலைவர் திரு. முரளிதரன் தெரிவித்தார். அவர் கூறிய அந்த மகிழ்ச்சியான செய்தியை அனைவரும் ஆமோதித்தனர்.

4. <u>நிறுவனத்திற்கான புதிய கிளையைத் திறத்தல்</u>
   நிறுவனத்தின் குழு உறுப்பினர் திருமதி பார்வதி மரகதம் பட்டு மாளிகையை எவ்வாறு விரிவாக்கம் செய்யப் போகிறீர்கள் என்பதை விளக்குமாறு தலைவரைக் கேட்டுக் கொண்டார். அதற்கு தலைவர் விரிவான விளக்கத்தைத் தந்தார். கோலாலம்பூரில் மட்டும் இயங்கிய நமது பட்டு மாளிகை, வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மற்ற இரு மாநிலங்களில் கிளை நிறுவனங்களாகச் செயல்படத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பினாங்கிலும் ஜொகூர் பாருவிலும் தலா ஒரு பட்டு மாளிகையைத் திறக்க முடிவெடுத்துள்ளோம். இதற்கு செயற்குழு உறுப்பினர்களின் ஆதரவு தேவை எனக் கேட்டுக் கொண்டார். இதற்குச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பித் தங்கள் ஆதரவை முழு மனதாகத் தெரிவித்துக் கொண்டனர்.

5. <u>விவாதிக்கப்பட்ட பிற விவரங்கள்</u>
   பினாங்கிலும் ஜொகூர்பாருவிலும் திறக்கப்படவுள்ள புதிய கிளைக் கட்டடங்களைப் பார்வையிட வேண்டும் எனச் செயற்குழு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வெகு விரைவில் அக்கட்டடங்களைப் பார்வையிடவும் வேறு வசதிகள் தொடர்பானவை ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தலைவர் தெரிவித்தார்.

6. <u>நன்றியுரை</u>
   நிர்வாகச் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் ஏறத்தாழ இரவு 9.30 மணிக்கு இனிதே நிறைவுற்றது.

அறிக்கை தயாரித்தவர்,

பா.தாமரை

(பா. தாமரைச் செல்வி)
நிர்வாகச் செயலாளர்
திகதி : 25 மே 20☐☐

**இடுபணி 1**

**மேற்கண்ட கூட்டக் குறிப்பறிக்கையின் விவரங்கள் பற்றிக் குழுவில் கலந்துரையாடுக.**

- கூட்டக் குறிப்பறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள்
- நடவடிக்கைகளில் குறிப்பிடப்படும் விவரங்கள்

**இடுபணி 2**

**சட்டக அமைப்பை வழிகாட்டியாகக் கொண்டு கூட்டக் குறிப்பறிக்கையை நிறைவு செய்க.**

பாரதி தேசிய இடைநிலைப்பள்ளி
தமிழ்மொழிக் கழகத்தின் இரண்டாவது செயற்குழுக் கூட்டக் குறிப்பறிக்கை

நாள் :

நேரம் :

இடம் :

தலைவர் :

வருகையாளர்கள்:

உடன் கலந்துகொண்டோர் :

நடவடிக்கை 1 (தலைவர் உரை)

நடவடிக்கை 2

நடவடிக்கை 3

நன்றியுரை

அறிக்கை தயாரித்தவர்,

(பெயர், பொறுப்பு)

திகதி:

**இடுபணி 3**

**உன் பள்ளித் தொழில் முனைவர் கழகத்தின் செயற்குழுக் கூட்டக் குறிப்பறிக்கையை எழுதுக.**

தொழில் முனைவர் கழகத்தின் நடவடிக்கை

- புதிய உறுப்பினர்கள் சேர்க்கை
- பள்ளியில் பொருள்கள் விற்றல்
- மாநில அளவில் கருத்தரங்கில் பங்கேற்றல்
- கழகத்திற்கு நிதி திரட்டுதல்

I-THINK

**வளப்படுத்துதல்**

**தமிழர் அறவாரியத்தில் நீ செயலாளர் பொறுப்பை ஏற்றிருக்கிறாய். அவ்வறவாரியத்தின் மூன்றாவது செயற்குழுக் கூட்டக் குறிப்பறிக்கையை 220 சொற்களில் எழுதுக.**

**குறைநீக்கல்**

**கீழ்க்காணும் சொற்றொடர்களுக்குக் குழுவில் கலந்துரையாடி சிறுகுறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| மனித மூலதனம் | பயனீட்டாளர்களின் நம்பிக்கை | தொழில் முனைவர் |